**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

**(Under Section 173 BNSS)**
**(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)**

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109413

1. District மாவட்டம் : Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 08/2024 Date: நாள் 26.07.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 26.07.2024 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 10.30 hrs — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.07.2024 — Time : நேரம் 18..00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.07.2024 — Time : நேரம் 18.00 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — About 15 Kms / South East
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துலுக்கப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.R.மணிமாறன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.ராமர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 15.02.1994
   (d) Nationality : நாட்டினம் — Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — 108 ஆம்புலன்ஸ் டிரைவர்
   (g) Address : முகவரி — எண்.85, கத்தாளம்பட்டி தெரு, விருதுநகர் அஞ்சல், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு.நாகராஜ், ஊராட்சிமன்ற தலைவர், துலுக்கப்பட்டி ஊராட்சி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது.</u>

நான் இன்று 26.07.2024 மாலை 18.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், விருதுநகர் அஞ்சல், கத்தாளம்பட்டி தெரு, கதவு எண்.85 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.ராமர் என்பவரின் மகன் திரு.R.மணிமாறன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 26.07.2024 இரவு 21.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.நாகராஜ், ஊராட்சிமன்ற தலைவர், துலுக்கப்பட்டி ஊராட்சி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2024 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன்.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Mani Maran 26/7/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

26.07.24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(K. RAMACHANDRAN)

Name: பெயர் ADSP/V&AC/VNR (OD)

Rank: நிலை ....................No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.08/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

வாதி திரு.R.மணிமாறன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்:- ரா.மணிமாறன், வயது 30, த/பெ.ராமர், கதவு எண்.85, கத்தாளம்பட்டி தெரு, விருதுநகர் அஞ்சல், விருதுநகர் மாவட்டம். பெறுநர்:- உயர்திரு.லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம், விருதுநகர். ஐயா, நான் விருதுநகர் மாவட்டம், விருதுநகர் அஞ்சல், கத்தாளம்பட்டி தெருவில் ஒத்திக்கு வீடு எடுத்து குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, பண்ணைபுரம் கிராமம் ஆகும். நான் விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இயங்கும் 108 ஆம்புலன்சில் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், ஆவுடையாபுரம் கிராமம், வடக்கு தெருவைச் சேர்ந்த திரு.செய்யது முகம்மது அவர்களின் மனைவி திருமதி.ரம்ஜான்பீவி என்பவரிடமிருந்து துலுக்கபட்டி கிராம புல எண்.41/10-ல் ஸ்ரீ சக்தி நகர் என்ற பெயரில் போடப்பட்டுள்ள பிளாட்டுகளில் 189.59 சதுர மீட்டர் (2040 சதுர அடி) பரப்பளவு கொண்ட பிளாட் எண்.103 என்கிற காலிமனையை -தொடர்ச்சி- சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.13004/2023, நாள்.14.12.2023 இன்படி எனது பெயரில் கிரைய பத்திரப்பதிவு செய்து வாங்கினேன். பின்னர் அந்த இடத்தில் சுமார் 820 சதுர அடி அளவில் எனது பெயரில் வீடு கட்டுவதற்கான அனுமதி பெறுவதற்காக சம்மந்தப்பட்ட ஆவணங்களை (வீட்டுமனை பத்திர நகல், ஆதார் அடையாள அட்டை நகல், வரைபடம்) எடுத்துக்கொண்டு 23.07.2024 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் துலுக்கப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த ஊராட்சி செயலர் திரு.ராமராஜ் என்பவரிடம் கொடுத்தேன். அவர் அவற்றை வாங்கி பார்த்துவிட்டு, மேற்படி ஆவணங்களை அவரது அருகிலிருந்த பெண் ஊழியர் ஒருவரிடம் கொடுத்து இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்தார். பின்னர் மேற்படி ஊராட்சி செயலர் ஆய்வு கட்டணம், திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் தொழிலாளர் நல நிதி உட்பட மொத்தம் ரூ.13,841/- ஊராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும் என்று கூறினார். நான் உடனே அந்த தொகையை எனது வங்கி கணக்கிலிருந்து Gpay மூலம் துலுக்கப்பட்டி ஊராட்சி வங்கி கணக்கிற்கு செலுத்தினேன். அதன் பிறகு ஊராட்சி செயலர் திரு.ராமராஜ் என்பவரிடம் கட்டிட உரிமம் மற்றும் வரைபடம் வழங்குவது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் கட்டிட -தொடர்ச்சி- உரிமம் மற்றும் வரைபடம் ஆகியவற்றை ஊராட்சிமன்ற தலைவர்தான் ஆன்லைனில் ஒப்புதல் செய்வார். எனவே நீங்கள் அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று கூறினார். அதனால் அன்று (23.07.2024) மதியம் சுமார் 02.30 மணி வரை ஊராட்சிமன்ற தலைவரை

பார்ப்பதற்காக காத்திருந்துவிட்டு, அவர் வராததாலும், நானும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் இரவு பணிக்கு செல்ல வேண்டி இருந்ததாலும், அவரை சந்திக்காமல் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் இன்று (26.07.2024) வேலைக்கு செல்லாமல் லீவு போட்டுவிட்டு காலை சுமார் 10.30 மணியளவில் துலுக்கப்பட்டி ஊராட்சிமன்ற அலுவலகம் சென்று, அங்கிருந்த ஊராட்சிமன்ற தலைவர் திரு.நாகராஜ் அவர்களை நேரில் சந்தித்து, எனது பெயரில் வீடு கட்ட வேண்டி கொடுத்துள்ள விண்ணப்பம் தொடர்பாக வழங்க வேண்டிய கட்டிட அனுமதி மற்றும் வரைபட அனுமதி பற்றி கேட்டேன். அதற்கு ஊராட்சிமன்ற தலைவர் திரு.நாகராஜ் அவர்கள் உங்களது கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் வரைபடத்தை ஆன்லைன்ல நான்தான் அப்ரூவல் செய்ய வேண்டும், அதற்கு எனக்கு தனியா ரூ.15,000/- பணத்தை கொடுத்தால்தான், நான் ஆன்லைன்ல உங்க கட்டிட அனுமதி மற்றும் வரைபட அனுமதி ஆகியவற்றை அப்ரூவல் செய்வேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், கஷ்டப்பட்டு -தொடர்ச்சி- இரவும் பகலும் ஆம்புலன்ஸ் ஓட்டி பிழைத்து வருகின்றேன், இந்த வீட்டையே பேங்க் லோன் போட்டுத்தான் கட்டப்போறேன், கொஞ்சம் நீங்க பார்த்து செய்யுங்கய்யா என்று கூறினேன். அதற்கு அவர், கட்டிட அனுமதி மற்றும் வரைபட அனுமதி வேண்டி ஊராட்சிமன்றத்துக்கு வார எல்லார்கிட்டேயும் இதுமாதிரிதான் கேட்பேன், உங்ககிட்ட மட்டும் புதுசா கேட்கல என்றும், பணம் செலவழிச்சுத்தான் ஊராட்சிமன்ற தலைவரா வந்திருக்கேன் என்றும், நீங்கள் ஆம்புலன்ஸ் டிரைவராக இருந்து சர்வீஸ் செய்றதாலயும், லோன் போட்டுத்தான் வீடு கட்டப்போறேன்னு சொல்றதாலயும் நீங்க வேணா ரூ.5,000/- பணத்தையாவது ரெடி பண்ணி கொண்டு வந்து கொடுங்க என்றும், இதற்கு மேல குறைக்க முடியாது என்றும், நீங்க பணத்தை கொடுத்தால்தான் உங்க கட்டிட அனுமதி மற்றும் வரைபட அனுமதி ஆகியவற்றை ஆன்லைன்ல அப்ரூவல் செய்து தருவேன் என்றும் கராறாக சொன்னார். ஊராட்சிமன்ற தலைவர் திரு.நாகராஜிற்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை இருந்தாலும் அவரிடம் அப்போது சரிங்கய்யா என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். -தொடர்ச்சி- நான் புதிதாக கட்டப்போகும் வீட்டிற்கு கட்டிட அனுமதி மற்றும் வரைபட அனுமதி ஆகியவற்றை ஆன்லைன்ல அப்ரூவல் செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக ரூ.5,000/- பணம் கேட்ட துலுக்கபட்டி ஊராட்சிமன்ற தலைவர் திரு.நாகராஜ் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) ரா.மணிமாறன் 26.07.2024 Sir, Received the complaint on 26.07.2024 at 18.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The

matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.8/2024 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 26.07.2024 at 21.00 hrs and took up for investigation. (Sd) (K.Ramachandran) 26.07.2024 (K.RAMACHANDRAN) ADSP/V&AC/VNR (OD).

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

26.07.24
(K.RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR (OD).